LIBRARY OF PARLIAMENT
2 ... Y 1989
SRI JAYEWARDENEPURA KOTTE

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

*[1987, ஜனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1987, ஜனவரி 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

[1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 13/83

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் II ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டத்தின் IIஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தில் IIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்தல்.

'பாகம் IIஅ

சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்கள்

அமைச்சரின் கட்டளையின் மூலம் பிரதேசங்களைச் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசங்களென வெளிப்படுத்துதலும் அத்தகைய கட்டளையின் பயனும்.

73அ. (1) ஒரு தேசிய விடுமுறை உறைவிடத்தைக் கொண்டிராத ஒரு பிரதேசமான எந்தப் பிரதேசத்திலும் சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வசதிகளையும் சேவைகளையும் வழங்கும் நோக்கங்களுக்கென அமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படுதலும் கட்டுப்படுத்தப்படுதலும் வேண்டுமென அமைச்சர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய பிரதேசத்தை ஒரு சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமென வெளிப்படுத்தலாம்.

(2) ஒராமுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அப்பிரதேசத்தில் அடங்கியுள்ள காணிகளினதும் அல்லது ஒவ்வொரு காணியினதும் அளவுகளையும் எல்லைகளையும் எடுத்துக்காட்டுவதன் மூலம் அப்பிரதேசத்தை வரையறுத்தல் வேண்டும்.

(3) ஒராமுட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் ஒரு சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசமென வெளிப்படுத்தப்பட வேண்டிய பிரதேசம் அல்லது பிரதேசத்தின் ஏதேனும் பகுதி ஏதேனும் உள்ளூரதிகார சபையின் நிருவாக எல்லைகளினுள் அமைந்திருப்பின், உள்ளூராட்சி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடில்லாது அத்தகைய கட்டளை எதுவும் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

**சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் ஒவ்வொன்றும் தொடர்பாக சபையின் பணிகள்.**

73ஆ. ஒவ்வொரு சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் தொடர்பாகவும் சபையின் பணிகளாவன—

(அ) அத்தகைய அபிவிருத்திப் பிரதேசத்தினுள் சுற்றுலா வசதிகளினதும் சேவைகளினதும் அபிவிருத்தியை மேம்படுத்தலும், திட்டமிடலும், ஊக்குவித்தலும் என்பனவாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அபிவிருத்திப் பிரதேசத்தினுள், சுற்றுலா வசதிகளையும் சேவைகளையும் ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும், பேணுதலும், தொழிற்படுதலும் என்பனவாகவிருத்தல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபையினதும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட சபையின் அங்கீகாரமின்றி சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தினுள் கட்டிடங்கள் முதலியவற்றை அமைப்பதை அல்லது கட்டியமைப்பதைத் தடை செய்தல்.**

73இ. (இதனகத்துப் பின்னர் "இயைபான தேதி" எனக் குறிப்பிடு செய்யப்படும்) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினால் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியிலிருந்து, எவ்வுள்ளூர் அதிகாரசபை எல்லைகளுக்குள் ஏதேனும் சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசம் அமைந்துள்ளதோ அவ்வுள்ளூர் அதிகார சபையினதும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட சபையின் அங்கீகாரமில்லாமல் ஆள் எவரும் அத்தகைய சுற்றுலா அபிவிருத்திப் பிரதேசத்தினுள் எவையேனும் சுற்றுலா வசதிகளையும் சேவைகளையும் வழங்கும் நோக்கத்திற்கென—

(அ) ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை அமைத்தல் அல்லது கட்டியமைத்தல் ஆகாது ; அல்லது

(ஆ) அப்போதுள்ள ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை மீளக் கட்டியமைத்தல், மாற்றுதல் அல்லது மாற்றியமைத்தல் ஆகாது ; அல்லது

(இ) ஏதேனும் தாபனத்தை அல்லது தொழிலை நிறுவிக் கொண்டு நடாத்துதல் ஆகாது அல்லது நிறுவுதல் அல்லது கொண்டு நடாத்துதல் ஆகாது.'.